1987 ஏப்ரல் 20]

சொன்னார்கள். சில சிரமங்களை ஏற்றுக்கொண்டு நடந்து போகின்றபொழுது—இதுபோன்ற ஆறுகளையெல்லாம் கடந்து போகின்றபொழுதுதான் அதுபோன்ற நன்மைகளே விளைகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, அந்தப் பாலத்தைக் கட்ட வேண்டுமா என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் மீண்டும் ஒருமுறை நன்றாக யோசித்து, ஒருவேளை இந்தப் பாலத்தைக் கட்டுவதன் மூலமாக அதிலே இருக்கின்ற புனிதத் தன்மை போய் விட்டால் சரியாக இருக்காது. அதைப்பற்றி யோசித்து, அதற்குப் பிறகு சொன்னால் கூடச் சரியாகயிருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களின் பதிலுக்கு மிகுந்த நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல், அவசியம் கட்டியாக வேண்டும். நன்கு யோசித்துச் சொல்கிறேன். கோடை காலங்களில் செல்வதற்குச் சிரமமில்லை. ஆனால் மழைக் காலத்தில் 50 மீட்டர் காட்டாற்று வாய்க்காலைக் கடப்பது என்பது—6 அடி, 7 அடி தண்ணீரில்—கிராம மக்களுக்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, அருள்கூர்ந்து பரிசீலித்துக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, பரிசீலிக்கலாம்.

பேரூர் தொகுதி, மதுக்கரை நகரியப் பகுதியில் தொழிற்பேட்டை துவங்குதல்.

412—(* வினா எண் 11721) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி மதுக்கரை நகரியக்குழு பகுதியில் தொழிற்பேட்டை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொழில் கூடங்கள் கட்டப் படுகின்றன.

(இ) எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

நாகை துறைமுகம்.

413—(*வினா எண் 12064) திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை துறைமுகத்திற்கு பயணிகள் கப்பல் வராமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு வந்துகொண்டிருந்த பயணிகள் கப்பலான எம். வி. சிதம்பரம் தீப்பிடித்துக் கொண்டதால் 15—2—1985 முதல் நாகப்பட்டினம் துறைமுகத்தில் பயணிகள் கப்பல் போக்குவரத்தினை நிறுத்திக் கொள்வதாக இந்தியக் கப்பல் கழகம் அறிவித்திருக்கிறது. நாகப்பட்டினம் துறைமுகத்தில் பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது. மைய அரசின் பதில் எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் எம். வி. சிதம்பரம் கப்பல் நிறுத்தப்பட்டதாகத் தகவலைச் சொன்னார்கள். அந்தக் கப்பலானது இரண்டாண்டுகளுக்கு முன்னாலே தீப்பிடித்து எரிந்ததற்குப் பின்னால், தென் மாவட்டங்களில் இருக்கக் கூடியவர்கள், சிங்கப்பூர், மலேஷியா போன்ற நாடுகளுக்குச் செல்கின்ற வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். மேலும் அங்கே வெங்காயம் போன்ற சரக்குகளை ஏற்றி அனுப்புவதற்கும் நாகை